முருகப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.12.2022, சனிக்கிழமை

1. மானுடம் சிறக்க ஞானவழியில்
மகத்துவம் அடைய அருளவந்த
ஞான தேசிகனே ஆறுமுக அரங்கனே
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறைவிலா உபயதிகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 02 ம் நாள் 17.12.2022, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு பட்டினத்தார் யானும்
3. யானும் உலகநலம் பெற வேண்டி
உயர் ஞானி அரங்கன் சன்மார்க்க
ஞானம் பரவிட உரைப்பேன்
நம்பகம் கொண்டு உலக மக்கள்
4. மக்களெல்லாம் சுத்த நெறியை
மறையாக ஏற்றுத் தொடர
தேக்கமான வினை விலகும்
தேவைகள் எல்லாம் பூர்த்தியாகும்
5. ஆகவே ஜீவதயவு என்கின்ற
ஆற்றல் பலம் அறமாகக் கூடி
செகத்தில் வந்த நோக்கமும்
சேவையுமாகப் பெருகித் தெளிந்து
6. தெளிந்து உலக சேமத்தில்
தன்னலம் துறந்து இனிதே
நுழைந்து அரங்கன் காட்டும்
ஞானவழி அகலா திளைப்பர்
7. திளைக்க மானுட வர்க்கம்
தெய்வநிலைக்கு மாறி தேறி
சளைக்கா அறமும் தருமமும்
சதா சேவைபட மிகுதி செய்து
8. செய்துமே மெய் சீடர்களாகி
செப்பிடுவேன் உலக மக்கள்
அய்யமற அரங்கன் தேடலின்
அழியாமை பெற்ற மக்களாகி
9. ஆகியே ஞானிகள் ஆவர்
அரங்கன் அவதார மகிமை
மகிமை அறிந்து மகிழ்ந்து
மண்ணுலகோர் அரங்கன் வழிவழி

10. வழிவழி தேற்றம் பெருகி
வாழும் காலம் ஆறுமுகனார்
அழிவிலா உயர் காட்சிப் பெற்று
ஆனந்தமாம் பேரானந்தம் அடைவர்

11. அடைவரே மானுடப் பிறவியின்
அற்புதம் அதீத மகத்துவம் தனை
தடையற ஞானியர்களால் உணர்வர்
தரணிமாற்றும் வல்லமை பெறுவர்
அளுகூல ஆசி முற்றே

–சுபம்–